செ.வெ.எண்:52/2018 நாள்:27.02.2018

**வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு பணிகள் திட்டமிட்ட காலத்திற்குள் முடித்திட அலுவலர்களுக்கு மாவட்ட கணிப்பாய்வு அலுவலர் திருமதி.ஜோதி நிர்மலாசாமி,இ.ஆ.ப.,அவர்கள் உத்தரவு!!!.**



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (27.02.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் முன்னிலையில் வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் அரசு செயலர் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை மற்றும் சிவகங்கை மாவட்ட கணிப்பாய்வு அலுவலர் திருமதி.ஜோதி நிர்மலாசாமி,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கணிப்பாய்வு அலுவலர் அவர்கள் மாவட்ட அளவில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்,

மாவட்ட அளவில் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் திட்டமிட்ட காலத்திற்குள் முடித்திட வேண்டும். மேலும் புதிய பணிகள் குறித்து உடனுக்குடன் அறிக்கையை தயார் செய்திட வேண்டும். அதேபோல் பணிகள் மேற்கொண்டு வருவதை அலுவலர்கள் கண்காணித்து வரவேண்டும் என அறிவுறுத்தினார். அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆதிதிராவிடர்துறை, பிற்பட்டோர் நலத்துறையின் மூலம் மாணவ, மாணவியர்களின் விடுதிகளை ஆய்வு மேற்கொண்டு சுகாதார முறையில் உணவு வழங்கப்பட்டு வருவதை உறுதிசெய்து கொள்ள வேண்டும். அதேபோல் பள்ளிக்கல்வித்துறையின் மூலம் பள்ளிகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் குறித்து கேட்டறிந்து அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வரவேண்டும். மேலும் வருவாய்த்துறையின் மூலம் பொதுமக்களுக்கு தேவையான சான்றிதழ்களை உடனுக்குடன் வழங்கிடவும் அதேபோல் அரசின் நலத்திட்டங்களை பயனாளிகளுக்கு குறித்த காலத்தில் கிடைக்கும் வகையில் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

தொடர்ந்து பொதுச்சுகாதாரத்துறையின் மூலம் சுகாதார நிலையங்களை தூய்மையாக பராமரிப்பதுடன் மருத்துவர் குழு மற்றும் பணியாளர்கள் சுழற்சி முறையில் பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்த வேண்டும். குறிப்பாக அனைத்து சுகாதார நிலையங்களிலும் முற்றிலும் பிரசவகால இறப்பு என்பது தவிர்த்திடும்

வகையில் உறுதிசெய்திட வேண்டும். மேலும் நோயாளிகளுக்கு தங்குதடையின்றி சிகிச்சை வழங்கிட வேண்டும். போதிய அளவு மருந்துகள் கையிருப்பில் வைத்துக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார். பின்னர் மகளிர் திட்டம், சமூகநலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம், சத்துணவுத்திட்டம் ஆகியத்துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து கேட்டறிந்ததுடன் மகளிர் திட்டத்தின் மூலம் அதிகளவில் சுயஉதவிக்குழுக்களை உருவாக்கி தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்திட வேண்டுமென அறிவுறுத்தினார்.

மேலும் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல்துறை, கூட்டுறவுத்துறை ஆகிய துறைகளின் மூலம் விவசாயிகளுக்கு தேவையான திட்டங்களை மேற்கொள்ள அறிவுறுத்தினார். அதேபோல் நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் ஆகியப்பகுதிகளில் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் வழங்குவதற்கு தேவையான முன்எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மேற்கண்ட துறைகளுடன் குடிநீர் வடிகால் வாரியத்துறை இணைந்து செயல்பட்டு போதிய அளவு குடிநீர் வழங்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். இதேபோல் மாவட்ட அளவில் அனைத்து துறைகளிலும் மேற்கொள்ளப்பட்ட பணிகள்யின்றி மேலும் புதிய பணிகளை மேற்கொள்வதற்கு ஏற்ப திட்டங்களை விரைவு படுத்தவேண்டுமென அலுவலர்களுக்கு மாவட்ட கணிப்பாய்வு அலுவலர் திருமதி.ஜோதி நிர்மலாசாமி,இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் உட்கட்டமைப்பு வசதிகள், நூலக வசதி மற்றும் பயிற்சி வகுப்புகள் நடைபெறும் இடங்களை பார்வையிட்டார். அதனைத்தொடர்ந்து முத்துப்பட்டி அரசு தொழிற் கல்லூரி, கிராம சேவை மையம், நல்லாகுளம் பகுதியில் தனிநபர் கழிப்பறை கட்டும் பணிகளை பார்வையிட்டார். மேலும் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கலியாந்தூர் கிராமத்தில் மகாத்மாகாந்தி தேசிய வேலைவாய்ப்பு உறுதியளிக்கும் திட்டத்தின் கீழ் கிணறு அமைக்கும் பணியினையும், கீழடி அகழ்வாய்வு ஆராய்ச்சி மேற்கொண்ட இடங்களையும், தோட்டக்கலைத்துறையின் மூலம் எருக்கள வெல்லூர் கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கு வெங்காயம் பதப்படுத்தும் கூடங்களையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.து.இளங்கோ, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.காஞ்சனா மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**::வெளியீடு:: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சிவகங்கை.**